வகையில், பஞ்சாயத்துக்கள் அளவிலே விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்கு அரசிடம் உத்தேசம் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலேயுள்ள இளைஞர்களும் நல்ல உடல் ஆரோக்கியத்தோடும், உள்ள ஆரோக்கியத்தோடும் வாழ்வதற்காக, தலைவர் கலைஞர் அவர்கள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்டங்கள் அளவில் போட்டிகளை நடத்தி, அதற்கான பரிசுகளை வழங்குவதற்கு, பெரிய அளவில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்காக இந்த அரசு 80 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களைப் பார்க்கும்போது, அவர் மல்யுத்த வீரராக இருந்திருப்பார் என்று நினைக்கின்றேன். வேறு ஏதாவது அவருடைய இள வயதில்—அவர் திருநெல்வேலி மாவட்டத்துக்காரராக இருப்பதனால், உறுதியாக மல்யுத்த வீரராக இருப்பார்—வேறு ஏதாவது விளையாட்டில் சிறப்புத் தகுதியைப் பெற்றிருக்கிறாரா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அவர் ரொம்ப நல்லவர். வேறு விளையாட்டுக்களில் ஈடுபடமாட்டார். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 99, திரு. நா. இராமகிருஷ்ணன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

99—

புலிகள் இனம்

***86—திரு. நா. இராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2006 ஆகஸ்ட் 25]

(அ) தமிழகக் காடுகளில் புலிகள் இனம் அழிந்து வருவது குறித்து அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புலிகள் இனத்தைப் பெருக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) தமிழகக் காடுகளில் புலிகள் இனம் அழியவில்லை. (ஆ) எழாது.

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் முதுமலைக்காடு, முண்டந்துறை, கொல்லிமலை, டாப்சிலிப், வால்பாறை போன்ற பகுதிகளில் புலிகள் வாழ்கின்றன. புலிகள் இனம் வெகுவாகக் குறைந்திருக்கின்றது. அதாவது, சிறுத்தைப் புலிகள், வரிப் புலிகள் வெகுவாகக் குறைந்திருப்பதாக அறியப்படுகின்றது. புலிகளின் தோலுக்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அதிகமாகக் கிராக்கி உள்ளது. புலிகளின் தோலுக்கு ஆசைப்பட்டு, வேட்டைக்காரர்கள் புலிகள் இனத்தைக் கொன்று அழிக்கிறார்கள். எனவே, அந்தப் புலிகள் இனத்தைப் பாதுகாக்கின்ற வகையிலேயும், அவற்றின் இனத்தைப் பெருக்குகின்ற வகையிலேயும் அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகக் காடுகளில் புலிகள் இனம் அழிவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. மேலும், புலிகள் இனத்தைப் பாதுகாக்கவும், அவற்றை வேட்டையாடுவதிலிருந்து தடுப்பதற்குமான நடவடிக்கைகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அதைப்போலவே, அவற்றின் இனப்பெருக்கத்தை மேலும் பெருக்கவும், பாதுகாத்திடவும், வனங்களிலேயே தேவையான வசதிகளை உருவாக்கியும், அவற்றிற்கு இடையூறு ஏற்படாத வண்ணம் திட்டங்கள் தீட்டப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படடு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முதுமலையிலும், அதைப்போலவே, ஆனைமலைப் பகுதியிலும், களக்காடு, முண்டந்துறை பகுதிகளிலும் புலிகள் காப்பகத்தை விஸ்தரிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். புலிகள் வளர்க்கும் திட்டத்தின்கீழ், மைய அரசுக்கு ஒரு திட்டம் தீட்டி, 11.5 கோடியே, 78 இலட்சத்து, 69 ஆயிரம் ரூபாய்க்கு, இந்த ஆண்டிலேயே அதற்கு நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டிருந்தோம். அவர்கள், நிதிப் பற்றாக்குறையின் காரணமாக,

[2006 ஆகஸ்ட் 25

1 கோடியே, 19 இலட்சத்து, 31 ஆயிரம் ரூபாயை இந்த ஆண்டிலே ஒதுக்கித் தந்து, 60 ஆயிரம் ரூபாயை முதல் தவணையாகக் கொடுத்திருக்கிறார்கள். அந்த முழுப் பணத்தையும் கொடுத்திருப்பார்களேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தப் பகுதிகளிலெல்லாம், நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கும். எனவே, வருங்காலத்திலே கையகப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

இங்கே புலியின் தோல்கள் எல்லாம் விற்கப்படுவதைப்பற்றிச் சொன்னார்கள். இதைப்போல இந்தத் துறைக்கு 11–7–2006–லே ஒரு தகவல், நீலகிரி மாவட்டத்தினுடைய வடக்குக் கோட்டத்திற்குக் கிடைக்கப்பெற்று, அது இரகசியத் தகவல் என்ற காரணத்தாலே, 12 ஆம் தேதி, இரகசியமாகவே அதிகாரிகள் ஒரு படையை அமைத்து, அதன் பின்னால் 14 ஆம் தேதி அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக, ஒரு சிறுத்தைத் தோலும், இரண்டு புலிக் குட்டிகளினுடைய தோல்களும் 14 ஆம் தேதி பறிமுதல் செய்யப்பட்டு, அதன் காரணமாக 17 பேர் கைது செய்யப்பட்டு, காவலிலே வைக்கப்பட்டிருக்கிறார்கள். 14 பேர் இதையே தொழிலாகக் கொண்டு செயல்படுகிறார்கள் என்பதை அறிந்து, அவர்களைக் குண்டர் சட்டத்திலே சிறையில் அடைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னும் சிலர் கேரளப் பகுதியிலிருந்து வந்து, அங்கு முகாமிட்டு, இந்தத் தோல்களையெல்லாம் வாங்கிச் சென்று விற்பதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பற்றியும் ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புலிகள் இனம் அழியக்கூடாது. அதன் இனத்தைப் பெருக்கவேண்டும். காட்டில் சுதந்திரமாக இருக்கவேண்டும். புலிகள், காட்டில் இருக்கும்பொழுது, அதன் தேவைகள், தண்ணீர் தாராளமாகக் கிடைக்கவேண்டும். இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், தண்ணீர் கிடைக்காமல் சில நேரங்களில் புலிகள், ஊருக்குள், கிராமத்திற்குள் நுழைந்து கால்நடைகளையும், மனிதர்களையும் வேட்டையாடி இருக்கின்றன. அந்த வகையிலே, மனிதர்களைப் பாதுகாக்கின்ற

2006 ஆகஸ்ட் 25]

வகையிலே, புலிகள் ஊருக்குள்ளும், நாட்டுக்குள்ளும் நுழையாதவகையில், என்ன பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவுள்ளது என்பதோடு, கோம்பையிலிருந்து கோம்பைமெட்டு வரைக்கும் யானைகள் விவசாயிகளின் நிலங்களில் புகுந்து நாசம் செய்கின்ற இந்தவேளையில், பாதுகாப்புக்காக மின் வேலி அமைக்கின்ற திட்டம் இந்த ஆண்டு உண்டா என்பதனையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புலிகளைப் பாதுகாப்பது பற்றியும், புலிகளால் மனிதர்களுக்கு ஆபத்து வராமல் தடுப்பது பற்றியும், நீண்ட அனுபவம் பெற்றவர் தம்பி திரு. நா. இராமகிருஷ்ணன். எனவே, அவரிடமிருந்து அந்த அனுபவங்களை எல்லாம் இந்த அரசு பெற்று, புலிகள் விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

100—

கால்நடை மருந்தகம்

***426—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி தொகுதி, குச்சனூர் துணைக் கால்நடை மருந்தகத்தைத் தரம் உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்துள்ள வினாவில் ஒரு திருத்தம், குச்சனூரில் செயல்பட்டு வருவது, துணைக் கால்நடை மருந்தகம் அல்ல, அது கிளை நிலையம் ஆகும். அதாவது Sub–Centre ஆகும்.

இந்த வினாவிற்கான விடை. (அ) தேனி மாவட்டம், குச்சனூர் கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசு தரப்பில் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.